# முதல் பருவ மதிப்பீடு 2025 - 26

## மாதிரி வினாத்தாள்

## Model Question Paper

## தமிழ் முதல் தாள் (BT)

வகுப்பு : 8 — நேரம் : $1^1/_2$ மணி

மதிப்பெண் : 40

**குறிப்புகள்:**

- முதல் 15 நிமிடம் சிந்தனை நேரமாகும். வினாக்களை வாசித்து, விடைகளை வரிசைப்படுத்த இந்த நேரத்தைப் பயன்படுத்தவும்.
- வினாக்களையும் குறிப்புகளையும் கவனமாக வாசித்து விடையளிக்கவும்.
- (i), (ii) எனக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளிக்கவும்.
- விடையளிக்கும்போது மதிப்பெண்ணையும் நேரத்தையும் கவனத்தில் கொள்ளவும்.

---

**I. 1, 2 ஆகிய வினாக்களுக்கு ஒரு மதிப்பெண் வீதம். (2 x 1 = 2)**

**சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுங்கள்.**

1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

அ) சிலப்பதிகாரம் ஆ) ஆசாரக் கோவை

இ) கண்ணன் பாட்டு ஈ) நற்றிணை

2. உலகக் காற்று தினம்

அ) ஜூன் 15 ஆ) ஜூலை 15

இ) ஆகஸ்டு15 ஈ) செப்டம்பர் 15

**II. 3 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு இரண்டு மதிப்பெண்கள் வீதம். (3 x 2 = 6)**

3. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.

உலகமெங்கும், பகலிரவு

4. கீழ்க்காண்பவற்றுள் சுகாதாரப் பழக்கத்துடன் தொடர்புடைய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

அ) கை, கால்களைச் சோப்பு மற்றும் கிருமி நாசினி பயன்படுத்திச் சுத்தம் செய்ய வேண்டும்.

ஆ) பள்ளி, பூங்கா, மற்றும் விளையாட்டு மைதானங்களில் குப்பைகளைப் போடலாம்.

இ) திறந்த வெளியில் சிறுநீர் கழிக்கலாம்.

ஈ) உடலுக்கு ஆரோக்கியம் தரும் உணவுகளை உண்ண வேண்டும்.

5. ஆசாரக்கோவை கூறும் நல்லொழுக்கங்கள் இரண்டனை எழுதுங்கள்.

**III. 6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு மூன்று மதிப்பெண்கள் வீதம். (5 x 3 = 15)**

6. சங்கரும் அவனுடைய வகுப்பு மாணவர்களும் சாப்பிடுகிறார்கள். கடகடவென்று சாப்பிட்ட அவர்கள் சாப்பிட்டு முடித்ததும், அவர்களுள் சிலர் வகுப்பறைக்குச் சென்றுவிட்டனர்.

இந்தத் தொடரில் காணப்படும் இரட்டைக்கிளவிச் சொல்லைக் கண்டறிந்து விளக்கி எழுதுங்கள்

© State Assessment Cell SCERT, Kerala

7. "வற்றாத நீரோடையாய் சாக்கடைத் தண்ணீர்
வழிநெடுகக் கொப்பளிக்கும் சாலைக் காட்சி
சிற்றூரோ நகரமெனப் பாகுபாடின்றிச்
சிதறிக்கிடக்கும் குப்பைமேடு நமைவர வேற்கும்."

இப்பாடல் வரிகளைச் சமகாலச் சூழலுடன் ஒப்பிட்டு விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்.

8. உங்கள் பள்ளி காலைக் கூட்டத்தில் வாசிப்பதற்குத் 'தூய்மை பேணுவோம்' என்னும் தலைப்பில் உறுதி மொழி தயார் செய்யுங்கள்.

9. உங்கள் பள்ளி ஆரோக்கிய மன்றம் சார்பாக அக்டோபர் 10 ஆம் நாள் காலை 10 மணிக்கு உணவுத்திருவிழா நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் மருத்துவர் கு.சிவராமன் சிறப்புரை நிகழ்த்துவார். இந்நிகழ்விற்கான சுவரொட்டி தயார் செய்யுங்கள்.

10. (i) சுற்றுப்புறத் தூய்மையின்மையால் ஏற்படும் விளைவுகளை எடுத்துரைத்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் விதம் துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.

(அல்லது)

(ii) 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்னும் பழமொழியை விளக்கி எழுதுங்கள்.

**IV. 11 முதல் 13 வரையுள்ள வினாக்களுக்கு நான்கு மதிப்பெண்கள் வீதம். (3 x 4 = 12)**

11. பத்தியை வாசித்து விடையளியுங்கள்

இந்தியக் கலைகளில் யோகாக்கலை பழம்பெரும் கலையாகப் போற்றப்படுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இக்கலைக்கு எழுத்து வடிவம் கொடுத்தவர் பதஞ்சலி முனிவர் ஆவார். எனவே அவர் யோகாவின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். 'யோகா' என்னும் சொல்லுக்கு இணைத்தல் ஒன்று சேர்த்தல் என்று பொருள். யோகக்கலையில் எட்டு பிரிவுகள் உள்ளன. அவை, இயமம், நியமம் ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணா, தியானம், சமாதி என்பனவாகும்.

அ) யோகாசனத்தின் தந்தை என அறியப்படுபவர் யார்?

ஆ) யோகா என்னும் சொல்லின் பொருள் யாது?

இ) யோகாக் கலையில் உள்ள பிரிவுகள் எவை?

ஈ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

(i) யோகாக் கலை இந்தியாவின் பழமை வாய்ந்த கலையாகும்.
(ii) யோகாசனத்தில் எட்டு பிரிவுகள் உள்ளன.

i) i சரி ii தவறு.

ii) i உம் ii உம் சரி.

iii) i தவறு ii சரி.

iv) i உம் ii உம் சரி.

12. நலமான வாழ்விற்கு நாம் கடைபிடிக்க வேண்டிய சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் வழிமுறைகளையும் எடுத்துரைத்து, நண்பனுக்குக் கடிதம் எழுதுங்கள்.

13. (i) 'முகங்கள்' என்னும் கதையில், உங்கள் மனம் கவர்ந்த கதாபாத்திரத்தினைச் சுட்டிக்காட்டி, அதன் காரணங்களை விளக்கி எழுதுங்கள்.

© State Assessment Cell SCERT, Kerala

(அல்லது)

(ii) உணர்வுகளைக் கையாளுவதற்குத் திருவள்ளுவர் கூறும் வழிமுறைகளை விளக்கி எழுதுங்கள்.

**V. பின்வரும் வினாவிற்கு ஐந்து மதிப்பெண்கள் மட்டும். (1 x 5 = 5)**

14. (i) 'சுகாதாரமே முதல் சொத்து' என்னும் கதையின் மையக்கருத்து, பாத்திரப்படைப்பு, பின்புலம், மொழிநடை, உத்தி என்பனவற்றை விளக்கி விமர்சனம் செய்யுங்கள்.

(அல்லது)

(ii) சமகாலச் சூழலில் மனநோய்கள் பெருகிவருகின்றன. அதற்கான காரணங்களை விளக்கித் தீர்வுகளும் வகையில் நாளிதழுக்குத் தலையங்கம் தயார் செய்யுங்கள்.

© State Assesment Cell SCERT, Kerala